# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2327/35 - 2023 අප්‍රේල් මස 12 වැනි බදාදා - 2023.04.12

*2327/35 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 12 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*பணிப்புரை இலக்கம் - 89*

*ச.வ.பி. 4/2011*

**2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம்**

*10(1)(ஆ)(ii) ஆம் பிரிவின் கீழான விசேட பணிப்புரை*

*2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் தவிசாளர் சாந்த நிரியெல்ல ஆகிய நான், நுகர்வோர் பாதுகாப்பிற்காக கலந்தாலோசனைகள் அல்லது விளக்கவுரைகளை மேற்கொள்வதன் மூலமாக, இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள பண்டங்களின் விற்பனைக்காக முனைகின்ற, விற்பனைக்காக காட்சிப்படுத்துகின்ற, விற்பனைக்காக விளம்பரஞ்செய்கின்ற, விற்பனைக்காக ஊக்குவிக்கின்ற அல்லது விற்பனைக்காக கட்டளைகளை அல்லது பொறுப்பெடுக்கின்ற, பண்டங்களை விற்பனை செய்வதற்கான கட்டளைகளை மேற்கொள்கின்ற எவரேனும் நேரடியான வர்த்தகர் -*

*1. (அ) நேரடியான வர்த்தகரின் பதிவிட முகவரியின் அடிப்படையின் மீது வியாபார பெயர் பதிவிலக்கத்தினை அல்லது கம்பனி பதிவிலக்கத்தினைச் சமர்ப்பித்து பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையுடன் அத்தகைய வர்த்தகரொருவராக தாமாக பதிவுசெய்துகொள்ளுதல் வேண்டுமென இத்தால் பணிக்கின்றேன் ;*


1A - PG 6289 — 81 (2023/04)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(ஆ) பின்வரும் விடயங்களை உள்ளடக்கிய அச்சிடப்பட்ட அல்லது இலத்திரனியல் வடிவிலுள்ள பற்றுச்சீட்டை அல்லது சிட்டையினை பாவனையாளரொருவருக்கு வழங்குதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய பற்றுச்சீட்டின் இணைப்பிரதியினை அவர் வைத்திருத்தலும் வேண்டும் :-

(i) பற்றுச்சீட்டு அல்லது சிட்டை இலக்கம் ;
(ii) கொடுக்கல் வாங்கலின் தன்மை, சில்லறை வியாபாரமாகவாயினுஞ்சரி அல்லது மொத்த வியாபாரமாயினுஞ்சரி ;
(iii) கொடுக்கல் வாங்கலின் திகதி ;
(iv) விற்பனை செய்யப்பட்ட பண்டங்களின் வகை ;
(v) விற்பனை செய்யப்பட்ட பண்டங்களின் தொகை ;
(vi) விற்பனை செய்யப்பட்ட பண்டங்களின் அலகொன்றின் பெறுமதி ;
(vii) விற்பனை செய்யப்பட்ட பண்டங்களின் மொத்தப் பெறுமதி ;
(viii) தொகுதி இலக்கம், ஏதேனுமிருப்பின் ;
(ix) கட்டுறுத்து இலக்கம் ஏதேனுமிருப்பின் ;
(x) பாவனையாளரின் பெயர் மற்றும் முகவரி ; அத்துடன்
(xi) வர்த்தகரொருவரால் வழங்கப்படுகின்ற ரசீதுகள் தொடர்பில் ஏதேனும் எழுதப்பட்ட சட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட வேறெவையேனும் பணிப்புக்கள் ;

(இ) இலத்திரனியல், எழுத்துமூலம் அல்லது வேறேதேனும் வடிவத்தில் கொண்டுநடாத்தப்பட்ட வர்த்தகத்தை ஊக்கப்படுத்தும் மற்றும் விளம்பரப்படுத்தும் போது அல்லது காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்ற பண்டங்களை கொள்வனவு செய்வதற்கு கோருகின்ற போது, அத்தகைய ஊக்கப்படுத்தல்களில் அல்லது விளம்பரங்களில், வியாபாரத்தின் அல்லது வர்த்தகத்தின் பெயர், வர்த்தகரின் அல்லது வேறு ஆளின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி, உற்பத்திப் பொருளின் தன்மை, அத்தகைய பொருளினைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள், உத்தரவாத காலப்பகுதி, விற்பனை விலை, கடன் செலுத்துகைகள் அல்லது தவணை முறையிலான கொடுப்பனவுகள், இலகு கொடுப்பனவுகளின் பணிப்புக்கள், உத்தரவாதங்கள் மற்றும் விற்பனையின் பின்னரான சேவைகள் மீதான பணிப்புக்கள் ஆகியவற்றை உள்ளடக்குதல் வேண்டும் ;

(ஈ) வர்த்தகத்தை ஊக்கப்படுத்தும் மற்றும் விளம்பரப்படுத்தும் போது, பாவனையாளரொருவரை ஏமாற்றுந் தன்மையான செயல்முறைகளான அல்லது பிழைவழியுய்த்தலான ஏதேனும் கூற்று, முகவரி அல்லது முகவரியின் விபரங்கள், செயல்விளக்கவுரை, காட்சிப்படுத்தல், விளக்கமளித்தல், தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் முகவரி, ஆவணம், படம் அல்லது காணொளி போன்றவற்றைப் பயன்படுத்தலாகாது ;

(உ) விற்பனைக்கு முன்னரான பாவனையாளரொருவருக்கு குறிகாட்டிப் படிவமொன்று வழங்கப்பட்டிருப்பின், உத்தரவாதமொன்று அல்லது உத்தரவாதத்தின் மீதான நிபந்தனைகள், விற்பனையின் பின்னரான சேவைகளின் மீதான விபரங்கள் மற்றும் மட்டுப்பாடுகள், உத்தரவாதியின் பெயர் மற்றும் முகவரி, உத்தரவாதத்தின் செல்லுபடியாகும் காலப்பகுதி, பாவனையாளரொருவர் அல்லது வேறெவரேனும் ஆளுக்கான நிவாரண வழிமுறைகள், கம்பனி மற்றும் நேரடி வர்த்தகரின் முழுப்பெயர், நிரந்தர முகவரி, தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி என்பன அத்தகைய குறிகாட்டிப் படிவத்தில் வாசிக்கத்தக்கவாறாகவும் புரிந்துகொள்ளக்கூடியவாறாகவும் தெளிவாக உள்ளடக்கியிருத்தல் வேண்டும் ;

(ஊ) ஏதேனும் கட்டளையொன்றினை அத்தகைய கட்டளை ஆக்கப்பட்டதிலிருந்து ஏழு நாட்களுக்குள் இரத்துச் செய்வதற்கான பாவனையாளரொருவரின் உரிமையை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

2. இவ்விசேட பணிப்பின் நோக்கத்துக்காக -

"நேரடி வர்த்தகர்" என்பது, நடமாடும் விற்பனை முறை மூலம், பாவனையாளரை நேரடியாக சந்தித்தல் மற்றும் இணக்கம் காணுதல், காட்சிப்படுத்துதல், விளக்கவுரையளித்தல் மூலம் அல்லது வேறேதேனும் ஒத்த செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற ஆளொருவர் எனப் பொருள்படுவதுடன் பின்வரும் ஆளொருவரை உள்ளடக்க மாட்டாது :-

(அ) பண்டங்களை விற்பனை செய்யும் செயற்பாட்டில் ஈடுபடுவதன் மூலமாகவன்றி வேறேதேனும் வழிகளில் பணத்தைச் சேகரிக்கின்ற ஆளொருவர் ; அத்துடன்

(ஆ) 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித் தொழில் சட்டத்தின் 83இ என்னும் பிரிவின் கீழான திட்டமொன்றில் ஈடுபடுகின்ற ஆளொருவர்.

**அட்டவணை**

(அ) சூரியஒளி முறைமை
(ஆ) தொலைபேசிகள் மற்றும் உதிரிப்பாகங்கள்
(இ) தளபாடங்கள்
(ஈ) தூய்மையாக்கிகள்
(உ) பாதணிகள்
(ஊ) கற்கை உபகரணங்கள்
(எ) சமையலறைப் பாத்திரங்கள் மற்றும் உபகரணங்கள்
(ஏ) கட்டில் விரிப்புகள் மற்றும் மெத்தைகள்
(ஐ) தைக்கப்பட்ட ஆடைகள்

சாந்த நிரிஎல்ல,
தவிசாளர்,
பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை.

கொழும்பு,
2023, ஏப்பிறல் 12.

EOG 04 - 0084/1

---

பணிப்புரை இலக்கம் - 90

ச.வ.பி. 4/2011

**2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம்**

10(1)(ஆ)(ii) ஆம் பிரிவின் கீழான விசேட பணிப்புரை

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் தவிசாளர் சாந்த நிரியெல்ல ஆகிய நான், நுகர்வோர் பாதுகாப்பிற்காக பாவனையாளருடனான கலந்தாலோசனைகள், விளக்கவுரைகள் அல்லது ஒத்த செயலினைக்கொண்டு விற்பனைக்காக முனைகின்ற, விற்பனைக்காக காட்சிப்படுத்துகின்ற, விற்பனைக்காக விளம்பரஞ்செய்கின்ற, விற்பனைக்காக ஊக்குவிக்கின்ற அல்லது விற்பனைக்காக கட்டளைகளை அல்லது பொறுப்பெடுக்கின்ற எவையேனும் பண்டங்களை விற்பனை செய்வதற்கான கட்டளைகளை பொறுப்பெடுக்கின்ற, வலையமைப்பு சந்தைப்படுத்தலில் ஈடுபடுகின்ற ஏதேனும் கம்பனி அல்லது உருவமானது -

1. (அ) விடயத்துக்கேற்ப நேரடியான வர்த்தகரின் வதிவிட முகவரியின் அடிப்படையின் மீது வியாபார பெயர் பதிவிலக்கத்தினை அல்லது கம்பனி பதிவிலக்கத்தினைச் சமர்ப்பித்து ரூபா இருபத்தைந்தாயிரம் எனும் ஆண்டிறுதி கட்டணமொன்றின் கொடுப்பனவின் மீது அத்தகைய வர்த்தகரொருவராக தாமாக பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையுடன் பதிவுசெய்துகொள்ளுதல் வேண்டுமென இத்தால் பணிக்கின்றேன் ;

(ஆ) பின்வரும் விடயங்களை உள்ளடக்கிய அச்சிடப்பட்ட அல்லது இலத்திரனியல் வடிவிலுள்ள பற்றுச்சீட்டை அல்லது சிட்டையை பாவனையாளரொருவருக்கு வழங்குதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய பற்றுச்சீட்டின் இணைப்பிரதியினை அவர் வைத்திருத்தலும் வேண்டும் :-

(i) பற்றுச்சீட்டு அல்லது சிட்டை இலக்கம் ;
(ii) கொடுக்கல் வாங்கலின் தன்மை, சில்லறை வியாபாரமாகவாயினுஞ்சரி அல்லது மொத்த வியாபார மாயினுஞ்சரி ;

(iii) கொடுக்கல் வாங்கலின் திகதி ;
(iv) விற்பனை செய்யப்பட்ட பண்டங்களின் வகை ;
(v) விற்பனை செய்யப்பட்ட பண்டங்களின் அளவு ;
(vi) விற்பனை செய்யப்பட்ட பண்டங்களின் அலகொன்றின் பெறுமதி ;
(vii) விற்பனை செய்யப்பட்ட பண்டங்களின் மொத்தப் பெறுமதி ;
(viii) தொகுதி இலக்கம், ஏதேனுமிருப்பின் ;
(ix) உத்தரவாத இலக்கம் ஏதேனுமிருப்பின் ;
(x) பாவனையாளரின் பெயர் மற்றும் முகவரி : அத்துடன்
(xi) வர்த்தகரொருவரால் வழங்கப்படுகின்ற பற்றுச்சீட்டுகள் தொடர்பில் ஏதேனும் எழுதப்பட்ட சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட வேறெவையேனும் பணிப்புக்கள் ;

(இ) வர்த்தகத்தை ஊக்கப்படுத்தும் மற்றும் விளம்பரப்படுத்தும் போது அல்லது காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்ற பண்டங்களை கொள்வனவு செய்வதற்குக் கோருகின்ற போது, அத்தகைய ஊக்கப்படுத்தல்களில் அல்லது விளம்பரங்களில், வியாபாரத்தின் அல்லது வர்த்தகத்தின் பெயர், வர்த்தகரின் அல்லது வேறு ஆளின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி, உற்பத்திப் பொருளின் தன்மை, அத்தகைய பொருளினைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள், உத்தரவாத காலப்பகுதி, விற்பனை விலை, கடன் செலுத்துகைகள் அல்லது தவணை முறையிலான கொடுப்பனவுகள், இலகு கொடுப்பனவுகளின் பணிப்புக்கள் உத்தரவாதங்கள் மற்றும் விற்பனையின் பின்னரான சேவைகள் மீதான பணிப்புக்கள் ஆகியவற்றை உள்ளடக்குதல் வேண்டும் ;

(ஈ) வர்த்தகத்தை ஊக்கப்படுத்தும் மற்றும் விளம்பரப்படுத்தும் போது, பாவனையாளரொருவரை ஏமாற்றுந் தன்மையான செயல்முறைகளான அல்லது பிழைவழியுய்த்தலான ஏதேனும் கூற்று, முகவரி அல்லது முகவரியின் விபரங்கள், செயல்விளக்கவுரை, காட்சிப்படுத்தல், விளக்கமளித்தல், தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் முகவரி, ஆவணம், படம் அல்லது காணொளி போன்றவற்றைப் பயன்படுத்தலாகாது ;

(உ) விற்பனைக்கு முன்னரான பாவனையாளரொருவருக்கு குறிகாட்டிப் படிவமொன்று வழங்கப்பட்டிருப்பின், உத்தரவாதமொன்று அல்லது உத்தரவாதத்தின் மீதான நிபந்தனைகள், விற்பனையின் பின்னரான சேவைகளின் மீதான விபரங்கள் மற்றும் மட்டுப்பாடுகள், உத்தரவாதியின் பெயர் மற்றும் முகவரி, உத்தரவாதத்தின் செல்லுபடியாகும் காலப்பகுதி, பாவனையாளரொருவர் அல்லது வேறு ஆளுக்கான நிவாரண வழிமுறைகள், வலையமைப்பு சந்தைப்படுத்தலில் ஈடுபட்டிருக்கின்ற வர்த்தகரொருவரின் முழுப்பெயர், நிரந்தர முகவரி, தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி என்பன அத்தகைய குறிகாட்டிப் படிவத்தில் வாசிக்கத்தக்கவாறாகவும் புரிந்துகொள்ளக்கூடியவாறாகவும் தெளிவாக உள்ளடக்கியிருத்தல் வேண்டும் ;

(ஊ) ஏதேனும் கட்டளையொன்றினை அத்தகைய கட்டளை ஆக்கப்பட்டதிலிருந்து ஏழு நாட்களுக்குள் இரத்துச்செய்வதற்கான பாவனையாளரொருவரின் அல்லது வேறெவரேனும் ஆளின் உரிமையை உறுதிப் படுத்துதல் வேண்டும்.

2. இவ்விசேட பணிப்பின் நோக்கத்துக்காக -

"வலையமைப்பு சந்தைப்படுத்தல்" என்பது, எவரேனும் ஆளினால் பின்வருவனவற்றுக்காக பாவனையாளரை நேருக்கு நேர் சந்திப்பதன் மூலம் ஊக்குவிப்புக்களை அல்லது பயன்பாட்டாளர் பரிந்துரையினை விற்பனை செய்தல் மற்றும் உற்பத்திப் பொருட்களை விளம்பரஞ் செய்தலினூடாக பண்டங்களை விற்பனை செய்தல் எனப் பொருள்படும் :-

(அ) அத்தகைய ஆளினால் அடையாளங்காணப்பட்ட குறித்தவொரு பாவனையாளரொருவருக்கு ; அல்லது

(ஆ) புதிய பாவனையாளர்களுடனான விற்பனை வலையமைப்பொன்றினைக் கட்டியெழுப்புவதன் மூலமானதாக இருக்கும் பட்சத்தில், அத்தகைய குறித்த பாவனையாளர் அல்லது முகவரினால் அறிமுகப்படுத்தப்பட்ட எவரேனும் புதிய பாவனையாளரினால் கொள்வனவு செய்யப்பட்ட விற்பனைகளின் பெறுமதியின் அடிப்படையில் அத்தகைய ஆளிடமிருந்து தரகொன்றினைப் பெறுகின்ற முகவரொருவராக அல்லது வேறு சுயாதீன முகவராக அத்தகைய குறித்த பாவனையாளரை ஈடுபடுத்துவதற்கு,

அது பின்வருவோரை உள்ளடக்க மாட்டாது -

(அ) பண்டங்களை விற்பனை செய்யும் செயற்பாட்டில் ஈடுபடுவதன் மூலமாகவன்றி வேறேதேனும் வழிகளில் பணத்தைச் சேகரிக்கின்ற ஆளொருவர் ;

(ஆ) வலையமைப்பொன்றில் இணைவதற்கு கட்டணமொன்றினை அறவிடுகின்ற ஆளொருவர் ;

(இ) அதிக எண்ணிக்கையான தரகுகளை எடுக்கின்றபோது, விற்பனைப் பண்டங்களின் அச்சிடப்பட்ட விலைக்கு அதிகமான விலையில் அத்தகைய பண்டங்களை விற்பனை செய்கின்ற ஆளொருவர் ;

(ஈ) 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித் தொழில் சட்டத்தின் 83இ என்னும் பிரிவின் கீழான திட்டமொன்றில் ஈடுபடுகின்ற ஆளொருவர்.

"வலையமைப்பு சந்தைப்படுத்தலில் ஈடுபடுகின்ற வர்த்தகர்" என்பது, "வலையமைப்பு சந்தைப்படுத்தல்" என்னும் பதத்துக்கான வரைவிலக்கணத்தின் நியதிகளின்படி பொருளமைத்துக் கொள்ளப்படுதல் வேண்டும், கட்டியமைக்கப்படுதல் வேண்டும்.

சாந்த நிரிஎல்ல,
தவிசாளர்,
பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை.

கொழும்பு,
2023, ஏப்பிறல் 12.

EOG 04 - 0084/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.